# குழித்துறை நகர்மன்றத்தின் 04-08-2022 வியாழக்கிழமை காலை 11.3 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் உள்ள தினசரி காய்கறி சந்தை கட்டுவதற்கென கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2020-2021-ன்கீழ் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பு நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அவர்களின் முன்னிலையில் கட்டிட ஆலோசகர் REFORM Design & Planning cell P.V.T. LTD மூலம் வேறு வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயார் செய்ய மேபற்பார்வை மற்றும் அறிக்கை சமர்ப்பிக்க ஆகியவற்றிற்கான செலவு தொகை ரூ.72,000/-க்கு Reform Design & Planning cell P.V.T. LTD மூலம் பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற பட்டியல் தொகையினை வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1967/2021/இ1.

மன்றத்தீர்மான எண்.229 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 2

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.18856/2022/தூ.இ.தி.2-ன்படி தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் 3-வது மாநில உயர்மட்டக்குழு கூட்டத்தின் 27-06-2022 நாளிட்ட நடவடிக்கையின்படி 2022-2023-ம் ஆண்டில் குழித்துறை நகராட்சியில் ஒரு பொது கழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசு பங்கு தொகை 50%, மாநில அரசு பங்கு தொகை 33% மற்றும் நகராட்சி பங்கு தொகை 17% ஆகும். எனவே பொது கழிப்பிடம் கட்ட குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19-ல் தேங்காய்பட்டணம் சாலை வெட்டுவெந்நி முனுசாமி வணிகவளாகத்தின் பின் பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டு ரூ.30 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3195/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.230 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 மடிச்சல் சாலையில் மழைநீர் வடிகால் பழுதடைந்துள்ளதால் மழைநீர் சாலையில் வடிந்து செல்கிறது. எனவே மேற்கண்ட மழைநீர் வடிகால் சீர் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.5,50,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம்

மட்டும்) மேற்படி பணியினை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3196/2022/இ1.

மன்றத்தீர்மான எண்.231 அனுமதிக்கப்பட்டது

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.